01.02.2025

அ.வ.எண். 137/2017

வாசா.1 - ஜானகி (எ) கண்ணம்மாள்

<u>6 மற்றும் 12 முதல் 14 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் கணபதி கவுண்டரின் மகள் ஆவேன். என் தகப்பனார் ஒரே மகன் தான். 1950 பத்திரப்படி கணபதி கவுண்டருக்கு ஒரு பாக சொத்தாக (B-SCHEDULE) ஒதுக்கப்பட்டது என்றால் ஆமாம். என் தகப்பனாருக்கு எவ்வளவு சொத்து விஸ்தீரணம் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு இதுநாள் வரை தெரியவில்லை. நான் வழக்கு 2 ஏக்கர் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கில் 2 ஏக்கருக்கு அதிகமாக 8.80 ஏக்கர் குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கணபதி கவுண்டருக்கு 1950 நிறைய சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றும், அந்த விவரமே எனக்கு தெரியாமல் நான் தாக்கல்ள செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. கணபதி கவுண்டரின் வாரிசுகளான எனக்கும், என்னுடைய சகேதர, சகோதரிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே ஏற்கனவே பாகப்பிரிவினை ஆகிவிட்டது என்றால் சரியல்ல.

கணபதி கவுண்டரின் சொத்தின் சிறிது சொத்துக்களை நானும், என் சகோதரர்களும் சேர்ந்து விற்பனை செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பத்திர அடமானம் வைப்பதில் நான் கையொப்பம் செய்யவில்லை. ரங்கசாமி கிரயம் வாங்கியது அது தனியாக உட்பிரிவு செய்து நான்கு எல்லைக்குள் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தாயாரும், என் சகோதரரும் ஒரு ராமன கவுண்டருக்கு சொத்துக்களை விற்பனை செய்துள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராமன கவுண்டரின் வாரிசுகளிடம் இருந்து ரங்கசாமி 2006 ல் கிரயம் பெற்றுள்ளார் என்றால் ஆமாம். 1961 ல் ராமன கவுண்டர் கிரயம் பெறும்போது உட்பிரிவு ஏற்பட்டு இரண்டு காலையில் நான்கு எல்லையுடன் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. ஏற்கனவே செக்குபந்தி போட்டு கிரயம் செய்து கொடுத்து உள்ளதால் ஏற்கனவே பாகப்பிரிவினை ஆன சொத்தை தான் கிரயம் பெற்றுள்ளனர் என்றும், அதை மறைத்து நான் பொய்யாக இந்த பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ராமன கவுண்டர் அதில் வீடு கட்டியுள்ளார் என்றால் 5 சென்ட்டுக்கு வீடு கட்டியுள்ளார் என்று எனக்கு தெரியும். மேற்படி அந்த

வீட்டிற்கு தண்ணீர் வரி, மின்சார வசதி, சொத்து வரி அனைத்தும் உள்ளது. 2006 ல் ராமன கவுண்டர் வீடு கட்டும்போது நான் தடுக்கவில்லையா என்றால் தடுத்தேன். ஆனால் சட்டப்படி அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை.

என்னுடைய வழக்கிற்கு முன்பாகவே வீடு கட்டிவிட்டார்கள் என்றால் ஆமாம். நான் 2012 ம் ஆண்டில் நான் என் உடன்பிறந்தவர்களிடம் பாகம் கேட்டேன் என்றால் ஆமாம். வழக்கு சொத்தில் வந்த விளைச்சலை நாங்கள் பங்கிட்டு கொண்டோம் என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் உரிய தரப்பினர்களை இந்த வழக்கில் சேர்க்காமல் தவிர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கில் ஏற்கனவே செய்த கிரயங்களை மறைத்து 2006 மற்றும் 2012 தேதிகளை மட்டும் வழக்கெழு மூலமாக குறிப்பிட்டு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளது நிலைக்காது என்றால் சரியல்ல. ராமன கவுண்டர் கிரயம் பெற்றது முதல் அவர் கிரயம் பெற்ற சொத்தில் அவர் அனுபவத்தில் இருந்தார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் கூட்டு அனுபவத்தில் உள்ளேன் என்று சொல்லியுள்ளது தவறு என்றால்சரியல்ல.

கணபதி கவுண்டருக்கு வேறு சொத்துக்கள் பாத்தியப்பட்டுள்ள நிலையில் நான் குறிப்பிட்டு இந்த வழக்கு சொத்தை மட்டும் பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளதிலிருந்து ஏற்கனவே எங்களுக்குள் பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது தெரியவருகிறது என்றால் சரியல்ல. ரங்கசாமி பெயருக்கு பட்டா, சிட்டா ஏற்பட்டு விட்டது என்றால் ஆமாம். ஏற்கனவே ராமன கவுண்டர் பெயரில் பட்டா, சிட்டா, உள்ள நிலையில் ரங்கசாமி கிரயம் பெற்ற பத்திரங்கள் செல்லாது என நான் பரிகாரம் கேட்டுள்ளது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. ரங்கசாமி வாங்கிய கிரய பத்திரம் செல்லும் நிலையில் நான் கேட்டுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/ஜானகி (எ) கண்ணம்மாள்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif, Sulur